DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No. 63/2020**

Deposition of Witness : RW -1 (2− ம் எதிர்மனுதாரர் தரப்பு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கார்த்திக் | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 10.07.2026

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>− தொடங்கப்பட்ட நேரம் : 12.30 பி.ப

நான் இம்மனுவின் 2ம் எதிரமனுதாரர் தரப்பு 1ம் சாட்சி ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைகள் தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். நான் என் தரப்பில் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **எ.ம.சா.ஆ−1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு ஆவணத்தின் அடிப்படையில்தான் தெரியும் என்றால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட வாகனம் எங்கள் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் **TN 57 BJ 1531** என்ற வாகனம் விபத்தன்று எங்களது நிறுவனத்தில் காப்பீடு இல்லை, அதன் பிறகுதான் காப்பீடு செய்யப்பட்டது. **09.03.2020** முதல் **08.03.2021** வரை காப்பீடு நிலுவையில்



JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:05:27 +0530

இருந்தது. 09.03.2020க்கு முன்பு அந்த வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்ததா என்றால் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை. விபத்திற்கு முன்பே எங்கள் நிறுவனத்தில் மேற்படி வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றும் வேண்டுமென்றே வழக்கிற்காக அவ்வாறு காப்பீடு செய்யப்படவில்லை என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கூடாது என்பதற்காக விபத்திற்கு பின்னிட்டு காப்பீடு எடுக்கப்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 12.34 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:05:31 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 10.07.2026